**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW10 Examined as PW8 (Expert Evidence -Doctor)**

| | | | |
|---|---|---|---|
| Name | டாக்டர்.M.நடேசன் | Caste: | |
| Father's name | முத்துராஜ் | Calling: | மருத்துவர் |
| Village | புதுக்கோட்டை | Religion: | Hindhu |
| Taluk | புதுக்கோட்டை | Age: | 52 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16/05/2023.

(1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். மற்ற எதிரிகள் ஆஜராகவில்லை, கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது)

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 27.03.2021 அன்று எனது வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்த நமச்சிவாயம், 40 வயது மதிக்கத்தக்க ஆண் அவர்களை பரிசோதனை செய்தேன்.

- அவரது இடது தோள்பட்டையில் கன்றிய காயம் இருந்தது.
- இடது தோள்பட்டை X-ray எடுக்கப்பட்டது, அவருக்கு எலும்புமுறிவு எதுவும் இல்லை.

அவர் 29.03.2021 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்தேன். **(**நான் வழங்கிய காயச்சான்று அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

2. அன்றைய தினமே எனது வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்த ஸ்ரீதர், 19 வயது மதிக்கத்தக்க ஆண் அவர்களை பரிசோதனை செய்தேன்.

- அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை.
- கழுத்து எலும்பு பகுதிக்கு X-ray எடுக்கப்பட்டது, அவருக்கு எலும்புமுறிவு எதுவும் இல்லை.

அவர் 29.03.2021 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்தேன். **(**நான் வழங்கிய காயச்சான்று அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கு சம்மந்தப்பட்ட விபத்து பதிவேட்டினை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் உள்ள விவரங்களை நான் கோப்பின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். போலீசார் வாக்குமூலத்தில் தெரிந்த நபர் அடித்ததாக தான் சொல்லி உள்ளார் என்று தான் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

நபர் என்பது ஒருமையை குறிக்கும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் எந்த ஆயுதங்களால் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. விபத்து பதிவேடு 27.03.2021ம் தேதி இரவு சுமார் 8 மணிக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். இடதுதோள்பட்டையில் ஒரு கன்றிய காயம் ஏற்பட்டுள்ளது என்றால் எதிர்திசையில் இருந்து தாக்கினால் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, வாய்ப்பு உள்ளது. மேற்படி காயம் கால்தடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நமச்சிவாயம் என்பவருக்கு வேறு காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. ஸ்ரீதர் என்ற நபருக்கு சிகிச்சை மேற்கொண்டதாக தான் விபத்து பதிவேடு உள்ளது என்றால் சரிதான், அவ்வாறு தான் அவர் பெயரை குறிப்பிட்டள்ளார். அவருக்கும் வெளிப்புற காயங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி காயம் கால்தடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த மாதம், எந்த தேதி, எங்கு வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.